

# 1.0 இலங்கையின் நாட்டார் கலைகள்

புராதன இலங்கையில் 64 கலைகள் இருந்ததாகக் குறிப்பிட்டிருக்கின்றது. இந்த 64கலைகளும் பிரதான இரு வகைகளாகப் பிரிக்கப்படும். அவையாவன:

- அறிஞர் கலை
- நாட்டார் கலை

கல்விமான்களுக்கும் அறிஞர்களுக்குமான அறிஞர்கலை அவர்களாலேயே ஊட்டம் பெற்றது. பெரும்பாலானோராக இருந்த சாதாரண குடிமக்களின் கலைத்திறமை நாட்டார்கலை என்ற துறையில் தொகுக்கப்படுகிறது. மனிதரின் எண்ணங்கள், எதிர்பார்ப்புத் தேவைகளை அடிப்படையாகக்கொண்டு ஆரம்பமான கலை நுட்பங்கள் "கிராமத்துக்கலைகள்" அல்லது "நாட்டார்கலைகள்" என்றழைக்கப்பட்டன. அவ்வாறே ஒவ்வொருவருடன் தொடர்பான வாழ்க்கைத் தொழில்களுடன் இணைந்ததால் நாட்டார் கலைகள் தோற்றம் பெற்றன.

நாட்டார் கலைகளை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

- கட்புலக் கலைகள்
- கேட்டற் கலைகள்

கட்புலக் கலைகள் எனப்படுபவை, கண்ணுக்குத் தெரிகின்ற தொடக்கூடிய கலைகளாகும். சில உதாரணங்கள் கீழே காட்டப்படுகின்றன.

- நெசவுக்கைத்தொழில்
- மட்பாண்டக் கைத்தொழில்
- அரக்கு வேலைக் கைத்தொழில்
- முகமூடிக் கலை
- ஓலை மற்றும் நார் கைத்தொழில்
- பின்னற் கைத்தொழில்
- பித்தளைக் கைத்தொழில்
- மரச் செதுக்கல்கள்

களைத்திருக்கும் வேளைகளில் மகிழ்ச்சியடைவதற்காக உபயோகித்த கிராமியப் பாடல்கள், இசை என்பன கேட்டற் கலைகளாக அழைக்கப்படுகின்றன.

- அரிவு வெட்டும் பாடல்கள்
- சேனைப்பாடல்கள்
- மாட்டுவண்டிப் பாடல்கள்
- சுரங்கப்பாடல்கள்
- தோணிப்பாடல்கள்
- குளவிப் பாட்டு என்பன இதற்குரிய சில உதாரணங்களாகும்

கேட்டலும் பார்வையும் சேர்ந்த கலைகள் இரண்டும் உள்ளடங்கிய கிராமியக் கலைகள் மிகவும் பிரபல்யம் அடைந்திருந்ததாகத் தெரிகின்றது.அவ்வாறான கிராமியக்கலைகள் சில கீழே காணப்படுகின்றன.

- சாந்திக் கிரியைகள்
- சொகரி நாடகங்கள்
- வன்னம ஆட்டம்
- கோலம் நாட்டியங்கள்
- கோலாட்டம்

இவை அத்தனையும் இலங்கையின் தனித்துவத்துடன் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன. யுனெஸ்கோ சாசனத்தின்படி ஏதேனும் மக்கள் சமூகத்தினரிடையே தொடர்ந்தும் இடம்பெற்று வரும் கலைநுட்பங்கள் அவ்வினத்தினரின் தேசிய அருஞ்செல்வமாகக் கருதப்படலாம்.

# 1.1 நெசவுக் கைத்தொழில்

நாட்டார் கலையாக கட்டியெழுப்பப்பட்டு புதிய தொழில்நுட்பத்துடன் கலந்ததால் சில நாட்டார் கலைகள் கைத்தொழில்களாக மாறியுள்ளன. உதாரணமாக, நெசவுக் கைத்தொழில், மட்பாண்டக் கைத்தொழில், அரக்குக் கைத்தொழில் என்பவற்றைக் காட்டலாம்.

ஆரம்பத்தில் நாட்டார் கலையாகக் கட்டியெழுப்பப்பட்டு கைத்தொழிற் புரட்சியின் பின்னர் உருவான இயந்திராதிகளைப் பயன்படுத்தியவாறு நெசவுக் கைத்தொழிலானது மிகப்பாரியளவான கைத்தொழிலாக மாறி உள்ளது. நெசவுக் கைத்தொழில், மனிதனது அடிப்படைத் தேவைகளில் ஒன்றான துணி உற்பத்திக்குப் பங்களிப்புச் செய்கின்றது.

விஜய இளவரசன் இலங்கைக்கு வருகை தந்தபோது, குவேனி நூல் நூற்றுக்கொண்டிருந்ததாக மகாவம்சம் கூறுகிறது. இலங்கையில் பருத்திச் செய்கையும் இருந்திருக்கலாம் என எமக்கு எண்ணத்தோன்றுவதற்குக் காரணம் நூற்பதற்கு பருத்திப்பஞ்சும் இருந்திருக்க வேண்டும் என்பதனாலாகும்.

நெசவுக்கைத்தொழிலின் முக்கிய மூலப்பொருளான நூலுக்குரிய இழை பிரதானமாக நான்கு வகையாகப் பெறப்படுகிறது. அவையாவன:

- தாவரப் பகுதிகள்
- விலங்கின் உரோமம்
- கனியப் பொருட்கள்
- விஞ்ஞான முறைகள் (தொழில்நுட்ப முறைகள்) என்பவையாகும்.

இழைகள் பெறப்படும் தாவரங்கள் சில கீழே தரப்படுகின்றன.

**பருத்தி, பட்டுச்சணல், சணல், இரேமிப்புல், அன்னாசி, வாழை**

- பருத்தித்தாவரத்தின் வித்துக்களைச் சுற்றியுள்ள பஞ்சு வெளியில் எடுக்கப்பட்டு துப்புரவு செய்யப்பட்டு நூலாக ஆக்கிக்கொள்ளப்படுகிறது. ஆரம்ப காலங்களில் நூல் நூற்பது கையால் செய்யப்பட்டாலும் பிற்காலத்தில் பருத்தி கொய்தல், நூற்றல், நூல் சுற்றுதல், நெசவு போன்ற அனேகமான செயற்பாடுகளுக்காக இயந்திரங்கள் பாவனைக்கு வந்தன. பருத்தி நூல் வகைகள் பல உள்ளன.

மரத்தைத் தறித்து, ஊறவைத்து, மரத்தண்டில் உள்ள இழைகளை அப்புறப்படுத்துவதனால் பட்டுச் சணல் மரத்திலிருந்து இழைகள் பெறப்படுகின்றன. இத்தாவரங்கள் உயரம் குறைவானவை. இவற்றில் இருந்து மிகவும் பிரகாசமான இழைகளைப் பெற்றுக்கொள்ளலாம். இவை பிளாக்ஸ் சணல்கள் எனவும் அழைக்கப்படும். இலினன் துணி இந்த இழைகளாலேயே நெய்யப்படுகின்றது. பட்டுச்சணல்,சடைச்சணல், அன்னாசி முதலான தாவரங்களின் இலைகளிலிருந்தும் இழைகள் பெறப்படுகின்றன. பெரும்பாலும் தாவர இலைகளின் இழைகளிலிருந்து பலவிதமான நெசவுகள்


இலவசமாக விநியோகிப்பதற்காக


செய்யப்படுகின்றன. பட்டுச்சணல், அன்னாசி போன்றவற்றின் இழைகளிலிருந்து படகுக்கயிறு, சாக்குக்கயிறு என்பவை தயாரிக்கப்படுகின்றன. இலங்கையில் தும்பறைப்பாய் பின்னுவோர், பட்டுச்சணல் இழைகளை தம் வேலைகளில் பயன்படுத்திக்கொள்வர்.

இழைகள் பெறப்படும் விலங்குகளில் செம்மறியாடு, லாமா, அல்பகா, விகுணா போன்றவை முக்கியமானவை. குளிரான காலநிலைகளுள்ள நாடுகளில் வாழ்வோர் தம் உடலின் வெப்பத்தைப் பாதுகாக்க கம்பளி ஆடைகளைப் பயன்படுத்துவர். மிகவும் சிறந்த இழைகளைத் தரும் விலங்கினமாக "மரினோ" எனப்படும் ஆடுவகை சிறப்பிடம் பெறுகிறது.

கனிய வகைகளிலிருந்து தயார் செய்யப்பட்ட நூலும் துணி நெய்வதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது. தங்க இழை, வெள்ளி இழைகள் போன்றவற்றை உதாரணமாகக் காட்டலாம். விமானமோட்டிகளும், தீயணைப்புப் படையைச் சேர்ந்தோரினதும் ஆடைகளுக்காக உடல் தீப்பற்றாத வகையைச் சார்ந்த இழைகள், அஸ்பஸ்டோஸ் எனப்படும் விசேட கனிய வகைகளிலிருந்து பெறப்படுகின்றன.

தற்போது, மிகப் பிரபல்யமாக உள்ள செயற்கைத் துணிவகைகளுக்காக விஞ்ஞான முறை மூலம் நூல் உற்பத்தி செய்யப்படுகின்றது. நெசவுக் கைத்தொழிலுக்காக பயன்படும் இழைகளின் வகைகள் பின்வருமாறு;


## நெசவுக்கைத்தொழில் இழை வகைகள்





நெசவுக்கைத்தொழிலில் ஈடுபடுவோர், புடைவை நெய்வதற்காக நூற்களிகளாகச் செய்யப்பட்ட நூலைமுதலில் பாவுநூல் உருளைகள் எனப்படும் நூல் உருளைகளில் சுற்றிக் கொள்வர். சுற்றும் சில்லுகளின் உதவியுடன் சுற்றப்படும் நூலை, கோல அமைப்புக்கேற்ப தட்டுக்களில் பொதி செய்வர். பிணையச்சின் உதவியுடன் நூலைத் தட்டுக்களாக வேறாக்கி (பிணையமைத்தல்) பாவோடு குடத்தின் ஆணிகளில் சுற்றப்படும். தேவையான அளவுக்கேற்ப பாவோடு குடத்தில் சுற்றப்படும் நூல் அதனைத் தொடர்ந்து 'பாவுதண்டு' எனப்படும் நெய்தற்பொறியின் பகுதியொன்றுடன் இணைக்கப்படும். விழுதுகள் வரிசையைக் கொண்டு கோல அமைப்பாக இழுக்கப்படும் நூற்சீப்பு எனப்படும் பொறியின் பாகத்தினூடாக வந்து அப்பொறியின் முற்பகுதியுடன் தொடர்புபடுத்தப்படும். நூலிடைவெளியைப் பெற்று மிதியடியை மிதித்து நெய்வதற்கு ஏற்றவாறு இந்த நூற்பாவு பொறிக்குட்படுத்தப்படும். பொறிக்கு உட்படுத்தப்பட் நூலின் பாவு, நூலிடை வழியே குறுக்கு நூலை உபயோகிக்கப்படுவதன் மூலம் நெய்தல் இடம்பெறும். குறுக்கு நூல் நாடாவின் துணையுடன் உபயோகிக்கப்படும்.

பொறியில் உள்ள பலகைமரம் எனப்படும் பாகத்தின் மூலம் குறுக்கு நூல் இறுக்கப்படும். நெய்யப்படும் புடவையின் பாகங்கள், பொறியில் உள்ள ஆடைச்சுற்றுத்தண்டு எனப்படும் பகுதியில் சுற்றப்படும்.


கையால் நெய்தலின்போது பயன்படுத்தப்படும் சில உபகரணங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.




துடிக்கட்டை




சீப்பு







பாவுநூலை பாவுதண்டுக்குச் சுற்றுதல்




விழுதுவரிசை



பாவுநூல் தட்டு



பாவோடு குடம் (பாவுருளை)



கைத்தறிப்பொறி


1. பொறிச்சட்டம்
2. பாவுதண்டு
3. ஆடைச்சுற்றுத்தண்டு
4. விழுது
5. பலகை மரம்
6. சீப்பு
7. நெம்புச்சட்டம்

புடைவை நெய்யும்போது கோல அமைப்புக்களை உபயோகிப்பதால் நூல் அலங்காரம் பெறுகின்றது. இதற்கென எவ்வளவோ கோல அமைப்புக்கள் உள்ளன. நெய்தலுக்காக பயன்படுத்தப்படும் அத்தனைக் கோலஅமைப்புக்களும் முக்கியமாக மூன்று பிரிவுகளில் உள்ளன.


- சிறுதறிக்கோல அமைப்பு
- சரிவுக்கோட்டுக் கோல அமைப்பு
- சற்றின் கோல அமைப்பு

மிகவும் எளிமையான நெசவுக்கோல அமைப்பு சாதா நெசவு என்றழைக்கப்படும். இதில் நான்கு வகைகள் உள்ளன. அந்நெசவுக்கோலங்களை நெய்வதற்காக நூற்தறிகள் இரண்டு போதுமானது. விழுதுகளிலிருந்து நூல் இழுக்கும் முறையை வேறுபடுத்தல், குறுக்கு நூல் இடும் அளவை வேறுபடுத்தல் மூலம் சாதா நெசவுக்கோலம் அமைக்கப்பட்டுள்ளது.


சாதா நெசவு வகைகள் நான்கை பின்வருமாறு காணலாம்.




சாதா நெசவு
(Plain Weave)



பாய் நெசவு
(Matt Weave)



பாவு விலா நெசவு
(Warp-rib Weave)



குறுக்கு ஓர நெசவு
(Weft-rib Weave)


இந்த நெசவுக்கோல அமைப்புக்களில் பெரும்பாலாகப் பயன்படுத்தப்படுவது சாதா நெசவாகும். அந் நெசவு வகையைக்கொண்டு நெய்யப்படும் புடைவை வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

**சேலை, சாரம், சீத்தை, வொயில், மல்பீஸ், பொப்ளின், கைக்குட்டை, வேட்டி, கிங்ஹாம், நான்சுக்**


பாடசாலைச் சீருடைகளான வெள்ளைக்கவுண், வெள்ளைக் காற்சட்டை என்பனவும் சாதா நெசவினாலேயே நெய்யப்பட்டுள்ளன. சாதா நெசவுக்குரிய வேறு கோல அமைப்புக்களைக் கொண்டு சட்டைத் துணிகள் நெசவு செய்யப்படுகின்றன.

கூடியளவான கோல அமைப்புக்கள் 'சரிவுக்கோட்டு' அமைப்புக்களாக உள்ளன. இவற்றுள் முக்கியமான கோல அமைப்புக்கள் ஆறும் கலப்புக்கோல அமைப்புக்கள் இரண்டும் உள்ளன. சரிவுக்கோட்டு நெசவு பெரும்பாலும் காற்சட்டைத் துணிகளை நெய்யப் பயன்படுத்தப்படுகிறது. பாடசாலைச்


சீருடைகளுக்காகத் தரப்படும் வெள்ளை, நீல நிறமுடைய காற்சட்டைத்துணிகளை அவதானியுங்கள். அதில் $45^0$ சரிவான சாய்வொன்றுடன் கூடிய கோடுகள் செல்லும் விதத்தைக் காணலாம். இக்கோட்டின் கோணங்கள் வித்தியாசப்படுவதால் சரிவுக்கோடுகளின் சாய்வும் வேறுபடும். இந்த வேறுபாடே அப்பெயரை இந்த வகைக்கு வழங்கியுள்ளன.




சரிவுக் கோட்டு நெசவு




கூர் சரிவுக் கோட்டு நெசவு




சுருள் சரிவுக் கோட்டு நெசவு



வைரச் சரிவுக் கோட்டு நெசவு



அலைச் சரிவுக் கோட்டு நெசவு




முறிவுச் சரிவுக் கோட்டு நெசவு


இந்நெசவுமுறைகள் கட்டில் விரிப்புகள், மேசை விரிப்புகள், திரைச்சீலை, குஷன் துணி போன்ற பல்வேறு நெய்தல்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. சுற்றின் நெசவுக்கோல அமைப்பு இருவகையானது. சற்றீன் வகைப்படுத்தலிலும் இருகோல அமைப்புக்கள் உள்ளன அவையாவன:

- சற்றின் நெசவு (Satin)
- சற்றீன் நெசவு (Sateen)

இத்நெசவுக்காக நூல் இழுத்தலின் மூலம் மின்னுந்தன்மை கிடைக்கின்றது. இக்கோல அமைப்பிலிருந்து நெய்யப்படும் துணிவகைகளுள் திரைச்சீலை, சேணங்களுக்கான வேலை, பெண்களின் உள்ளாடைகளுக்கும் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன.



சற்றின் நெசவு



சற்றீன் நெசவு

தற்போது இக்கோல அமைப்புக்களைக்கொண்டு துணி நெய்தல் அருகியுள்ளமையால் மிகவும் எளிமையான சாதா நெசவைக்கொண்டு நெய்யப்படும் துணி அச்சிடும் முறையைப் பயன்படுத்தி அலங்காரம் செய்தல் பெரும்பாலும் இடம்பெறுகின்றது. அச்சிடும்முறை மூலம் அலங்காரம் செய்யப்படும் துணி வகைகள் மிகப் பிரபல்யமாகியுள்ளன.

இன்று அருகிச் செல்லும் கைத்தறிநெசவுக்கைத்தொழிலுக்கு புத்துயிர் வழங்கவேண்டியுள்ளது. முற்காலத்தில் குடிசைக்கைத்தொழிலாகப் பிரசித்தி பெற்றிருந்த நெசவுக்கைத்தொழில் இன்று குற்றுயிராகி உள்ளது. இந்தியாவில் தற்போதும் கூட கைத்தறிப் புடைவை உற்பத்தித் துறையிலேயே விலைமதிப்புமிக்க புடைவைகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

**பயிற்சி**

01. பார்வைக் கலைகள் 05 ஐப் பெயரிடுக.
02. நெசவுக் கைத்தொழில் பயன்படுத்தப்படும் தாவரங்கள் 5ஐ வகுப்பில் சமர்ப்பிக்குக.
03. நூற்பின்னும் கைத்தறியொன்றில் பயன்படும் சீப்பின் மாதிரியொன்றை உருவாக்குக.
04. பாய்ப்பின்னல் மூலம் தென்னோலையைக் கொண்டு மேசை விரிப்பொன்றை ஆக்குக.
05. நிறமூட்டப்பட்ட சணல்நூலைக் கொண்டு அலைச் சரிவுக்கோட்டு நெசவினால் சுவர் அலங்கார மொன்றைப் பின்னுக.

# 1.2 மட்பாண்டக் கைத்தொழில்

வரலாற்றுக்கு முந்திய காலத்திலிருந்து நடைபெற்றுவரும் மட்பாண்டக்கைத்தொழில் பாரம்பரிய கைத்தொழிலாகும். முற்காலத்தில் மட்பாண்டவினைஞர்களால் குறிப்பாக அரசர்களுக்கும் உயர்குலத்தவருக்குமாக மட்பாண்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. தற்போது இக்கைத்தொழில் எல்லாத்துறைகளிலும் அபிவிருத்தியடைந்து பாரிய கைத்தொழிலாக மாறியுள்ளது.

மட்பாண்டக்கைத்தொழிலுக்கான களி, நிலத்திலிருந்து பெறப்படுகின்றது. இக்களிமண்ணானது படிவாக அமைந்துள்ளது. பெல்ட்ஸ்பார் எனப்படும் பாறை வகையானது பௌதிக, இரசாயன மற்றும் உயிரியற் தாக்கங்களுக்கு உள்ளாகியதனால் களிமண் உருவாகியது. அலுமினா சிலிகேட் என இரசாயன ரீதியாக அழைக்கப்படும் களியானது, 0.002 மீற்றரை விடச் சிறிய துணிக்கைகளாகும். இதில் அலுமினியம் ஒக்ஸைட் ஒரு பாகமும், சிலிகன்டையொக்ஸைட் இரு பாகங்களும் நீர் இருபாகங்களும் உள்ளடங்கும். இக்களியானது, இவற்றின் கூற்றமைப்புக்கு அமைய இரு வகைகளாகும்.

- முதற் களிமண்
- துணைக் களிமண்

முதற்களிமண் என்று கூறப்படுவது, களிமண் உருவாகும் இடத்திலேயே படிவாகி, அமர்ந்து, சாயலில் வெள்ளைநிறமாகி, குறைந்த நெகிழ்வுடைய களிமண் வகையாகும்.

**இக்களிமண்ணைக்கொண்டு பீங்கான், மட்பாண்டங்கள், முகப்பவுடர், பற்பசை, மருந்து மேலுறை, தீந்தை,வெப்பக்காவலி உபகரணங்கள், பசளை போன்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.**

துணைக்களிமண், துணைக்களி, வண்டற்களி என்ற பெயர்களாலும் அழைக்கப்படுகின்றது. மழை, காற்று போன்ற இயற்கைக்காரணிகளால் உருவாகிய இடத்திலேயே கழுவப்பட்டுப்போய் ஆறு, ஓடை, கால்வாய்களின் அருகில் படிவாக அமையும் இக்களிமண்ணில் சிவப்பு, பழுப்பு, கறுப்பு போன்ற பலவித சாயல்கள் உள்ளன. அடித்துக் கொண்டு வரப்படும் இரசாயன அசேதன கூறுகளின் சேர்மானத்தினால் இவ்வாறு பலவித நிறங்களைக் கொண்டமைந்திருப்பதுடன் இயற்கைக் களியாகவும் உயர்மட்டத்தில் உள்ளது. பின்வரும் பொருட்கள் துணைக் களிமண்ணைக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்றன.

**சட்டி, குடம், பானை போன்ற சமையலறை உபகரணங்கள், ஓடு, செங்கல், சூளையின் துணைப்பாகங்கள், நில ஓடுகள், சுவர் ஓடுகள், மண்விளக்கு, கூசா, அலங்காரப்பாத்திரங்கள்**

பாத்திரங்கள் உற்பத்தி செய்யப்படுமுன்பதாக களி பதப்படுத்தப்படுகின்றது. பாத்திரங்களுக்குத் தேவையான வடிவத்தைப் பெறுவதாயின், களியில் நெகிழ்வுத்தன்மை, வடிவைப்பெற இன்றியமையாததொன்றாகும். கிராமங்களில் உள்ள களிமண் வினைஞர்கள் படிவுகளிலிருந்து வெளியில் எடுத்து, களியின் அசுத்தங்களை அகற்றி, குவியலாக வைத்து சில தினங்களுக்குப் பதமாவதற்கு விட்டுவைத்து, கால்களினால் மிதித்துப் பதமாக்கிக்கொள்வர். இல்லாவிடின் களியை உலரவைத்துத் தூளாக்கி அரித்துக்கொள்வர். உருவாக்கங்களின்போது நீரைச்சேர்த்துக் கொள்வர். மிகப்பெரிய தொழிற்சாலைகளில் இயந்திராதிகளின் உதவியுடன் களி பதப்படுத்தப்படுகின்றது.


மட்பாண்ட உற்பத்திக்கென பலவிதமான முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

1. வனைவோன் சில்லு
2. களிப்பாளங்கள் பாவித்தல்
3. களிச்சுருள்கள் பாவித்தல்
4. அச்சுக்கள் பாவித்தல்
5. மாலமைத்தல்

## 01. வனைவோன் சில்லு

மட்பாண்ட கைத்தொழில் மிகச்சிறந்த உற்பத்தி முறையாக வனைவோன் சில்லு பயன்பாடு (குயவன் சில்லு) கொள்ளப்படுகின்றது. இச்சில்லானது சுழற்றக்கூடிய வட்டமான தளமொன்றுடன் அமைக்கப்பட்டுள்ளது. இத்தளத்தின் மீது களிமண் குவிக்கப்படுவதுடன் சுழற்றுவதன் மூலம்

அக்களியானது மையப்படுத்தப்படும். வட்டமான வடிவமுள்ள சட்டி, குடம், கூசா போன்ற மட்பாண்டங்கள் இச்சில்லைக்கொண்டு உருவாக்கப்படுகின்றன. முன்பு இதனைச் சுழற்றுவதற்காக ஒருவரும், பாண்டங்களை உருவாக்குவதற்கு இன்னொருவரும் தேவைப்பட்டனர். தற்போது காலால் இயக்கக்கூடிய குயவன் சில்லுகளும் மின்சாரத்தினால் இயக்கக்கூடிய மின் சில்லுகளும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.


வனைவோன் சில்லு


களி உருண்டை ஒன்றைக்கொண்டு மத்தியில் வைத்து பாண்டமொன்றை உருவாக்குதல்

## 02. களிப்பாளங்களைப் பாவித்தல்

களியினாலான பாளத்தைக்கொண்டு பாண்டங்கள் உற்பத்தி செய்தல், முற்காலத்திலிருந்து இன்றுவரை நடைபெறுகிறது. சமனான தடிப்புள்ள களிப்பாளங்களைச்செய்து ஒன்றுடனொன்று இணைப்பதனால் பாண்டங்கள் உருவாக்கப்படுகின்றன. இங்கு செவ்வகமான பாண்டங்கள் மட்டுமன்றி வட்டமான பாண்டங்களை உருவாக்கும் திறனும் உண்டு. பின்வரும் படத்தில் களிப்பாளத்தைக் கொண்டு செய்யப்பட்ட பாண்டங்கள் சில காட்டப்பட்டுள்ளன.






களிப்பாளங்கள் உருளையைக்கொண்டு செய்யப்படுவதுடன் விரும்பிய வடிவத்தில் செய்து கொள்ளப்படுகின்றது. மரத்தினாலான உருளையொன்றும் அதன் மூலம் செய்துகொள்ளப்பட்ட களிப்பாள உருவாக்கங்களும் இங்கு காட்டப்படுகின்றன.

## 03. களிச் சுருள்கள் பாவித்தல்

களிச்சுருள்களின் பயன்பாட்டினால் பாண்டங்களைச்செய்யும் போது களி உருளைகளாக நீளமாகச்செய்து கொள்ளப்படுகின்றன. அவற்றை ஒன்றின் மீது ஒன்று இருக்குமாறு ஒட்டிக்கொள்வதால் பாண்டங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவ்வாறான சில பாண்டங்கள் கீழே காட்டப்படுகின்றன.


களிச்சுருளைச் செய்து கொள்ளல்


களிச்சுருள்கள் ஒன்றின்மீது ஒன்று வைத்து ஒட்டுதல்


களிச்சுருள்களால் செய்யப்பட்ட பாண்டங்கள்


## 04. அச்சுக்கள் பாவித்தல்

ஒரேயளவானதும் ஒரே வடிவிலானதுமான நிறைய பாத்திரங்களை உற்பத்தி செய்யும் பொருத்தமான முறை அச்சுக்களைக்கொண்டு பாண்டங்களை உற்பத்தி செய்வதாகும். இங்கு தேவைப்பட்ட பாண்டத்தை உதாரணமாகக்கொண்டு தனியொரு துண்டில் அல்லது பல துண்டுகளைக்கொண்டு அச்சைச்செய்வது அவசியம். இவ்வாறு அச்சு செய்வதற்காக மட்பாண்டவினைஞர்கள் பெரும்பாலும் பாரிசுச்சாந்தைப் பயன்படுத்துகின்றனர். கரைசலாக்கப்பட்ட பாரிசுச் சாந்துத் திரவம் விரைவாக இறுகிவிடுகின்றது. களியினால் சுற்றிலும் செய்து கொண்ட பின்னணியின் மீது உதாரணமாக எடுத்ததை வைத்து பாரிசுச்சாந்துத் திரவத்தை ஊற்றி இறுகவிடுவதன் மூலம் அச்சு உருவாகும். இந்த அச்சிலும் பதமான களித்திரவத்தை ஊற்றி தேவையான பாண்டத்தைச் செய்து கொள்ளலாம். இந்த முறையில் சிக்கலான வடிவமுடைய பாண்டத்தைக்கூட செய்து கொள்ளலாம். தேநீர் கேத்தல் போன்ற பாத்திர மொன்றுக்காக தேநீர்க்கேத்தல், நீர்க்குழாய் முனை, மூடி என்பவற்றை வெவ்வேறான அச்சுகளின் மூலம் செய்து இறுதியில் ஒட்டிக்கொள்ளலாம்.

## 05. மாலமைத்தல்.

செய்து கொள்ளப்பட்ட மட்பாண்டங்கள் சூளையில் வைத்து சுடப்படும். இங்கு பாத்திரத்தின் களி சூடாகி, திரவமாக மாறித் துளைகள் மூடப்பட்டு மட்பாண்டம் திண்மமாக மாறும். அலங்காரத்துக்கு மட்டுமன்றி நீண்டகாலத்துக்கு நிலைத்தல், நீரைத் தேங்கவைக்கும் திறன் போன்றன இந்த முதலாவது சுடுதல் மூலம் அதாவது விஸ்கோத்தை சுடும்போது நிகழும்.

கிராமிய மட்பாண்ட வினைஞன், மட்பாண்டங்ளைச் சுடுவதற்காக உள்ளூர் சூளை எனப்படும் வித்தியாசமான சூளையொன்றைப் பயன்படுதுவர். இது மிக எளிமையான செயல் முறையாகும். இதற்கு எரிபொருளாக விறகு, மரத்தூள், உமி, தென்னந்தும்பு முதலானவை பயன்படுத்தப்படுகின்றன. இச்சூளையின் மூலம் சட்டி, கூசா, உண்டியல் போன்றவை மட்டும் செய்து கொள்ளலாம்.அவ்வாறான சூளையொன்றின் படம் பின்வருமாறு காட்டப்படுகின்றது.




A - அடுப்பு
B - மூலப்பொருள்
C - வைக்கோற்தட்டு
D - களித்தட்டு

உள்நாட்டு சூளை ஒன்றின் தளவரைபுத் திட்டம்

இங்கு அடுப்பைச்சுற்றி மூலப்பொருட்கள் வைக்கப்படுகின்றன. அதனைச் சுற்றி வைக்கோற தட்டுவைத்ததன்பின் களித்தட்டினால் இறுதியில் அனைத்தும் மூடப்படும். எரிபொருளாகப்பயன்படும் பொருட்களை உட்படுத்தி அதன் மூலம் வெப்பம் பெறப்படும். பொருள் சுடப்பட்டு அது அணைந்துபோனதன்பின் வெளியில் எடுக்கப்படும்.

தற்போது பெருங்கைத்தொழிலான மட்பாண்டத்தொழிலுக்கான வெப்பத்தை பேணி வைத்துக் கொள்ளும் மூடியைக் கொண்ட சூளைகளும் பொருட்கள் வைக்கப்பட்ட தட்டும் (Kiln Cars), தாமாகவே சுடப்பட்டு வெளியில் வருவதுபோன்று உள்ள சூளைகளும் பயன்படுத்தப்படுகின்றன. பொருட்கள் வைக்கப்படும் தட்டு சுழன்றவாறு முன்னால் வருகையில் சுடப்படுதல் நிகழ்வது போன்ற சூளைகளும் உற்பத்தி செய்யப்பட்டு உள்ளன.

## மட்பாண்டங்களை அலங்கரித்தல்

மட்பாண்டங்களை அலங்கரிக்கும் சந்தர்ப்பங்கள் நான்கை இவ்வாறு காட்டலாம்.

- உற்பத்தியின்போது அலங்கரித்தல்
- தோல்வன்மை பதமாக்கப்படும்போது அலங்கரித்தல்
- உலர்ந்த நிலையின்போது அலங்கரித்தல்
- சுடப்பட்ட பின்னர் அலங்கரித்தல்

என்றவாறாக நான்கு விதங்களைக் காட்டலாம்.

பின்வரும் முறை உற்பத்தியின்போது அலங்கார முறைகளை காட்டலாம்.

- செதுக்கலில் ஈடுபடுதல்
- சுருள் முறை அலங்காரமிடுதல்
- ஓங்கோப் இடுதல்
- புடைப்பு அலங்காரமிடுதல்
- அமிழ்த்தும் அலங்காரமிடுதல்

தோல் வன்மையாக்கும் சந்தர்ப்பத்தில் இடப்படும் அலங்கார முறை

- துளை வெட்டுதல்
- சுரண்டும் முறை
- தூணின் அடிவார அமைப்பு
- முத்திரையிடுதல்
- புடைப்பு அலங்காரமிடுதல்
- ஓங்கோப் திரவமிடுதல்

உலர்ந்த நிலைமைகளின்போது இடப்படும் சில அலங்கார முறைகளும் உள்ளன.

- துண்டு அலங்காரமிடுதல்
- பளிங்குக்கல் முறைக்கு அலங்காரமிடுதல்

சுடப்பட்ட பின் இடப்படும் அலங்கார முறைகள் பின்வருமாறு:

- மினுக்குதல்
- மாற்றுச் சித்திரமுறை
- துண்டு அலங்காரமிடுதல்
- ஓவியம் வரைதல்

இவ்வலங்கார முறைகளுள் விசேடமானதொன்றாக மினுக்குதல் கருதப்படுகிறது (Glazing). பிரகாசமானதும் மெதுமையானதுமான மேற்பரப்பை ஏற்படுத்திக்கொள்வதற்காக இடப்படும் கண்ணாடி போன்ற மேலுறையாக மினுக்குதலைக் கொள்ளலாம். நீங்கள் பயன்படுத்தும் பீங்கான், கோப்பை போன்றன பெரும்பாலும் மினுக்கப்பட்ட பாண்டங்களாகவிருக்கலாம். ஆயினும் கிராமத்து வினைஞனுக்கு இவ்வலங்கார முறைகளைப் பயன்படுத்தும் திறமைகள் கிடையாது. அவர்கள் பாண்டங்களைச் சுடும் சூளைகளில் உள்ள வெப்பநிலையின் வீச்சு, மினுக்குவதற்காகச் சுடும் அளவுக்குப் போதுமானது அல்ல.

ஆயினும் தற்போது சமையலறைகளில் உபகரணங்கள் பற்றிய கோரிக்கைகள் குறைந்த போதிலும் பூச்சாடிகள், காசு உண்டியல்கள், சுவரலங்காரம், நந்தவன அலங்காரம் போன்று பெரிய ளவான மட்பாண்டங்களுக்கும் கூடியளவான கோரிக்கை உள்ளது. பாரியளவான தொழிற்சாலைகளில் அரச அனுசரணையுடன் ஏற்றுமதித்தரத்தில் பாண்டங்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துகின்றனர். செம்மண் பாண்டங்கள் (சுடுமட்சிலை) போன்று மினுக்குதலை இடும் பாண்டங்களுக்காகவும் தற்போது சிறந்த சந்தை உருவாகியுள்ளது.

யப்பான், சீனா, கொரியா போன்ற நாடுகளில் வெற்றிகரமாக குடிசைக் கைத்தொழிலாக மேற் கொள்ளப்படும் மட்பாண்டக் கைத்தொழில் இலங்கையருக்கும் அரும்பொருளாக ஆக்கிக்கொள்ளும் திறமையும் உண்டு. உற்பத்திக்குத் தேவையான அத்தனை மூலப்பொருளும் எம்நாட்டில் இருந்தபோதும் பாரியளவிலான தொழிற்சாலைகளில் மட்டும் உற்பத்தியாகின்ற மட்பாண்டங்களைக் குடிசைக்கைத்தொழிலாக அபிவிருத்தி செய்துகொள்வது கடினமானதல்ல. காலத்தின் தேவைக்கேற்ப பாண்டங்கள் உற்பத்தி செய்யப்படுமாயின் சந்தைப்படுத்தல் பற்றிய பிரச்சினைகள் தோன்றலாம்.

**பயிற்சி :**

01. பதப்படுத்திய களியினால் மண்விளக்குகள் சிலவற்றைச் செய்க.
02. வனைவோன் சில்லொன்றின் மாதிரியைத் தயாரிக்கவும்.
03. களிப் பாளத்தைக் கொண்டு சுவர் அலங்காரமொன்றை உருவாக்குக.
04. சந்தையில் உள்ள மட்பாண்டமொன்றை எடுத்து நீங்கள் விரும்பும் விதத்தில் வடிவமொன்றையிட்டு அலங்கரிக்கவும்.

# 1.3 அரக்கு வேலைக் கைத்தொழில்

அரக்கு வேலைக்கைத்தொழில் எனப்படுவது மரத்தளபாடம் அல்லது மரத்தளபாடத்தின் பகுதியொன்றை அரக்கு எனப்படும் பூச்சைக்கொண்டு அலங்கரிப்பதாகும். சிறு பூச்சியொன்றின் உடலிலிருந்து வெளியாகும் பசைபோன்ற பொருள் இறுகிக் கெட்டியாவதால் கிடைக்கம் பொருள் கொண்டே அரக்குப்பூச்சு உற்பத்தி செய்யப்படுகிறது.

இலங்கையில் அரக்கு வேலைக்கைத்தொழிலாளர்கள், அரக்குப் பூச்சி கூடுதலாக வாழும் பகுதிகளிலேயே வாழ்கின்றனர்.

மாத்தளை மாவட்டத்தில் - பல்லெஹுபுவித

கண்டி மாவட்டத்தில் - ஹுரீகடுவ

மாத்தறை மாவட்டத்தில் - அங்குல்மடுவ

முற்காலத்தில் அரசர்களதும் அரச குமாரர்களதும் உல்லாச வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களுக்காக அரக்கு ஓவியங்கள் பயன்படுத்தப்பட்டன. கைத்தடி, ஆலவட்டம், வெற்றிலைச்செப்பு, ஆபரணப்பெட்டி, புத்தக மட்டை, கொடிக் கைப்பிடி, ஓலைச்சுவடி மட்டை, விசிறிக்கைப்பிடி போன்றவற்றுக்காக பல்வேறு நிறங்களினால் அலங்காரக் கோலங்கள் இடப்பட்டு தயார் செய்யப்பட்டன.

அரக்குப் பூச்சிகள் இஞ்சி, சித்திரவேம்பு போன்ற மரங்களின் சாற்றை உறிஞ்சிக்குடித்தவாறு அதிலேயே உயிர்வாழ்கின்றன. இப்பூச்சிகளின் உடலிருந்து வெளியாகும் பிசின் மரங்களில் தங்கிவிடுகிறது. இப்பிசினுள்ள கிளைக்குச்சிகளை வெட்டி வெயிலில் உலர்த்தி அரக்கை வேறாக்கிக் கொள்வர். இவற்றை உரலில் இட்டு இடித்துத் தூளாக்கி துணிப்பையில் வைத்துத் தீயில் பிடிக்கும்போது அரக்கு சூடாகி வெளியே வழியும். அவை மரக்கோலின் அந்தத்தில் வைக்கப்படும். இன்னுமொரு மரக்கோலை துணையாகக் கொண்டு சூடாக்கப்பட்ட அரக்கு பதப்படுத்தப்படும். நிறத்தைச்சேர்த்துத் தயாரிக்கப்பட்ட அரக்கு, ஆக்கங்களுக்காக உபயோகிக்கப்படும். முதலிலேயே பெறப்படும் புடமிடா அரக்கு செதில் அரக்கு எனப்படும். அவற்றை வெப்பமாக்கித் தயாரித்துக்கொள்ளும் புடமிட்ட அரக்கு,

- நீர் அரக்கு
- சூடாக்கும் அரக்கு
- முத்திரை அரக்கு
- கடைச்சல் அரக்கு

என்றவாறாக பல வகைப்படும். மேலும் நகவேலை அரக்கு, உட்பதித்தல் அரக்கு என்றவாறாகப் பயன்பாட்டுக்கு அமையவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

முதலிலேயே பெற்றுக்கொள்ளும் புடமிடா அரக்கு செம்மைநிற பழுப்பு வர்ண சாயலைப்பெறும். அவற்றுக்கு பல்வேறு வர்ணங்களுக்காக சாயத்தூள் கலந்துகொள்ளப்படும்.


சிவப்புச் சாயல் - சாதிலிங்கக்கல்

மஞ்சட் சாயல் - மஞ்சட் களிமண், செம்மஞ்சட் களிமண்

கறுப்புச் சாயல் - புகைக்கரி

தற்போது நிறங்கள் மட்டுமன்றி அரக்கும் இறக்குமதி செய்யப்படுகின்றது. அரக்கு உற்பத்திக்கான சூழலை எம்நாட்டிலேயே ஏற்படுத்துவது நாட்டின் தேவையாகும்.

அரக்குவேலைக் கைத்தொழிலில் மிகவும் சிறப்பான அலங்காரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. சிங்கள சித்திரப்பாரம்பரியத்தில் வரும் இலைக்கொத்து, அரும்புக்காட்டுரு, கல்பிந்து, சீப்பு, நீரலை, தீச்சுவாலை போன்ற கோல அமைப்புக்கள் மிகவும் அலங்காரமாக அரக்குவேலை வினைஞர்களால் மரப்பொருட்களின் மீது ஓவியங்களாகத் தீட்டப்படுகின்றன. அவ்வாறான கோல அமைப்புக்கள் சிலவற்றை இங்கு காணலாம்.




கோயிற்சித்திரக் கைத்தொழிலில், ஓவியங்கள் தீட்டப்பட்டபின், உபயோகிக்கப்படும் காப்புப் பூச்சாக அரக்கு, எண்ணெய்யுடன் கலவை செய்வதால் செய்து கொள்ளப்படும் திரவமாகவும் பயன்படுத்தப்படுகின்றது. தற்போது மரத்தளபாடங்களை நேர்த்தியாக்குவதற்காகப் பயன்படுத்தப்படும் 'பிரெஞ்சுப் பொலிஷ்' எனப்படும் பூச்சும் கூட மெதில்மதுசாரத்துடன் அரக்கு கரைக்கப்பட்டு நிறத்தை கலந்து கொள்வதால் ஆக்கப்படுகின்றது.

பௌத்த கலாசாரத்தையொட்டி அபிவிருத்தியடைந்த கைத்தொழிலாக அரக்குவேலை பெயரிடப்படுகின்றது. இலங்கை புனித வெள்ளரசு மரம் கொண்டுவரப்பட்டபோது இங்கு தருவிக்கப்பட்ட பதினெட்டு கலைக் கைத்தொழிலாளரிடையே அரக்குவேலை வினைஞர்களும் உள்ளடங்கியதாகக் குறிப்பிடப்படுகிறது. ஒவ்வொரு சமூகத்தினதும் உபகரணப்பயன்பாட்டுக்கமைய அப்பண்டங்களில் இடப்படும் அலங்காரங்களும் வேறுபடும். உதாரணமாக, ஆலவட்டத்தை எடுத்துக்கொள்வோம். தலதா மாளிகையில் புனித தந்தத்தை வழிபடுவதற்காக செய்யப்படும் ஆலவட்டம், அரசமாளிகைக்காகச் செய்யப்படும் ஆலவட்டம், திருமண வீடுகளுக்காகச் செய்யப்படும் ஆலவட்டம், மரண வீடுகளுக்காகச் செய்யப்படும் ஆலவட்டம், ஊர்வலங்களுக்காகச் செய்யப்படும் ஆலவட்டம், சாதாரண வீடுகளில் வைக்கப்படும் ஆலவட்டங்கள் என்பவற்றில் ஆலவட்டங்களின் கைப்பிடிக்கு இடப்படும் அலங்காரங்கள் வெவ்வேறுபட்டவை.




அரக்கு வேலைகளில் ஒவ்வொரு உபகரணத்துக்காகவும் உபயோகிக்கப்படும் அலங்கார கோலஅமைப்புக்கள் வேறுபடுவது போலவே, உபகரணத்தின் கோல அமைப்புக்களின் இடங்களுக்கமையவும் வேறுபடும். உபகரணத்தின் அடியில், உடலில், மேலாக உபயோகிக்கப்படும் அலங்காரமும் ஒன்றுக்கொன்று வித்தியாசமாகும். மகுடமொன்றுடன் கூடிய அலங்காரக் கோலஅமைப்பை உபயோகிப்பதாயின் ஏதும் உபகரணத்தின் மேலாக மட்டுமே இருக்கும். திறமையான வினைஞர்கள் இதுபற்றி அக்கறையாயிருப்பர். எனவே அரக்கு வேலையில் ஈடுபடும் வினைஞர்கள், வெளிப்புறப் பண்புகளுக்கு மேலதிகமாக மிகவும் உன்னதமான நுட்பத்திறன்களையும் கொண்டவர்கள் என்பதை மறக்கவியலாது.

**பயிற்சி :**

01. அரக்குப் பூச்சிகள் கூடுதலாக வாழும் பகுதிகள் 3ஐப் பெயரிடுக.
02. நீங்கள் அமர்ந்துள்ள ஆசனத்தின் மீது அலங்காரமான அரக்கு உருவாக்கமொன்றைச் செய்து கொள்க.
03. சந்தையிலும் உங்கள் வீட்டிலும் உள்ள அரக்கின் மூலம் அலங்காரம் செய்யப்பட்ட உபகரணங்கள் சிலவற்றை வகுப்பறையில் காட்சிப்படுத்தவும். (குழு வேலையாக)

# 1.4 முகமூடிக் கைத்தொழில்

இலங்கையில் முகமூடிக் கலையானது, பொம்மலாட்டக் கலையுடன் கைகோர்த்துச் செல்வதாகத் தெரிகின்றது. தென் மாகாணத்தில் அம்பலாங்கொடையில் பொம்மலாட்ட நாட்டியம் மிகச் சிறப்பானதொன்றாகும். மிரிஸ்ஸ, உடுபில்ல, மாத்தறை, பெரிய அம்பலாங்கொடை, பெந்தரை, தெவுந்தறை போன்ற பகுதிகளில் முகமூடிக்கலை பிரிசித்திபெற்றது. முகமூடிகளை முக்கியமாக இரு வகைகளாகப் பிரித்துக்காட்டலாம். அவையாவன:

- கோலம் முகமூடிகள்
- பேயாட்ட முகமூடிகள்

## கோலம் முகமூடிகள்

கிராமிய நாட்டியக் கலையின் கோலம் நாட்டியம், கோலம் முகமூடிகள் அணிந்து கொண்டே ஆடப்படுகின்றது. சுபீட்சத்தை மலரச்செய்வது இதன் முக்கிய நோக்கமாகும். அதே சமயம் விநோத இரசனையை அடைவதும் இன்னொரு நோக்கமாகும். முன் வைக்கப்படும் கதையம்சங்கள், ஹாஸ்யத்தை ஏற்படுத்துவதுடன் சமூகத்தை ஏதேனும் ஒரு நிலையில் கிண்டல் செய்வதாக அவை அமையும்.

இங்கு சமர்ப்பணமாகும் கதாபாத்திரங்களுக்கேயுரித்தான முகமூடிகள் உள்ளன. அக்கதாபாத்திரங்களின் சிறப்பு அம்சங்களும் இந்த முகமூடிகளுக்குத் தரப்பட்டுள்ளன. பலவித வர்ணங்கள், கோடுகள், வடிவங்கள் இதற்கெனப் பயன்படுத்தப்பட்டு உள்ளன. இவ்வாறு ஒன்றுக்கொன்று வேறுபடும் விதமாகத் தயாரிக்கப்பட்ட சுமார் ஐம்பது, அறுபது வரையிலான முகமூடிகள் கோலம் நாட்டியத்துக்காக பயன்படுத்தப்படுகின்றன.

வட்டவடிவமான அரங்கொன்றில் கைகோர்த்த பாடகர்களும், மேள வாத்தியக்காரர்களும் சேர்ந்து நடிக்கப்படும் கோலம் நாட்டியம் இரவு பூராகவும் நடத்தப்படுவது ஒரு பழக்கமாக இருந்தது. இந்த அரங்கில் கமுகு மரங்களைச் சாய்த்து கிளைகள் ஒன்றாகக்கட்டி அமைத்த "மாறுவேடத்திரை" எனப்படும் திரையும் இருந்தது. கைகோர்த்த பாடகர்கள், தமது பாடலில் விபரிக்கும் கதாபாத்திரங்களை நடிப்போர் மேள தாளத்துக்கு ஏற்ப அசைந்தவாறு மேடையில் பிரவேசிப்பர். தற்போது நீங்கள் கேட்டு அறிந்துள்ள 'லெஞ்சினா - சோபனா' எனக் கைகோர்த்த பாடகர்கள் பாடும்போது அழகிய பெண்மணியின் முகமூடியணிந்த, பெண்களின் ஆடைகளை அணிந்த நடிகர் மேளவாத்தியத்துக்கேற்ப ஆடியவாறு அரங்குக்குள் நுழைவர். தன்னைத்தானே அறிமுகப்படுத்தியவாறு பாடல்கள் பாடியவாறு அரங்கைச்சுற்றி வலம்வருவர். இந்த விதமாக சமர்ப்பணமாகும் கதாபாத்திரங்களுக்குரிய முகமூடிகள் ஏராளமாக உள்ளன.

| | | |
|---|---|---|
| லெஞ்சினா | தூடினி | அத்தா முத்தா |
| ஐஸயா | விதானையார் | கட்டியக்காரன் |
| நொஞ்சி அக்கா | அரசர், இராணி, மந்திரி, கப்பறி கோலம் | காப்பிரியன் |
| பணிக்கிலே | பொலிசுக்காரன் | சேவகன் |
| ஹெண்டா | செட்டி | முதலியார் |
| செபற கொலுவா | லியனாரச்சி | கர பிற்ற கோலம் |



நொஞ்சி அக்கா


செட்டி


ஹெஞ்சப்பு


பணிக்கிலே


பொலிஸ் சாஜன்


பொலிசுக்காரன்

## பேயாட்ட முகமூடிகள்

பதினெண் சன்னிய எனப்படும் சாந்திக் கிரியைகளுக்காக பேய் உருத்தோற்றம் கொண்ட பதினெட்டு முகமூடிகள் பயன்படுத்தப்படுகின்றன. நோய்த்தொல்லைகளை ஏற்படுத்தும் பேய்களின் மாய சக்திகளை தோல்வியுறச் செய்து விரட்டியடித்தல் இதன் நோக்கமாகும். 'சன்னியக்கும' அல்லது பதினெண்சன்னிகளுக்குரிய பதினெட்டு நோய்கள் உள்ளனவென்பது பேயோட்டி மந்திரவாதிகளின் நம்பிக்கையாகும். ஒவ்வொரு பூதமும் ஒவ்வொரு நோயின் காரணியாதலினால் அதற்கேயுரிய முகமூடியினால் அது பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதுடன் அதனால் ஏற்படுத்தப்படும் நோய்க்குறிகள் முகமூடிப் பண்புகளில் அடக்கப்பட்டு உள்ளன. செவிட்டுச் சன்னிக்குரிய முகமூடியில் காதுகள் இல்லை. முடமான சன்னியின் முகத்தில் வாய்க்கோணலாகி உள்ளதுடன் ஒரு மூக்குத்துவாரம் அடுத்ததை விட சற்று உயரமாக அமைந்துள்ளது. சித்திரப்பிரமை ஏற்படுத்தும் கபால சன்னியின் முகமூடியில் பற்கள் வெளித்தள்ளியுள்ள அதே நேரம் தாடைகள் கீழுதடு இல்லை. பற்கள் வெளித்தள்ளியுள்ள அதேநேரம் தாடைகள் வீங்கிப்போன கேலிக்கிடமான முகமாகும். காதுச் சன்னியின் கண் இமைகள் மூடிப்போயுள்ளன. பல்வரிசைகள் திறந்து வாயிலிருந்து வெளியாகியுள்ளன. இவ்வாறாக சன்னியை ஏற்படுத்தும் பிசாசின் பண்புகளை முகமூடிக்கு ஏற்படுத்த முகமூடிக்கலைஞன் சிரத்தை எடுத்துள்ளான். பதினெண் சன்னிகளையும் பெயரளவில் அறிந்து கொள்வோம்.

- கொர சன்னி
- கண சன்னி
- அமுக்கு சன்னி
- மருசன்னி
- வேடச் சன்னி
- வாதச் சன்னி
- ஊமைச்சன்னி
- தீச் சன்னி
- கோலச் சன்னி
- தெமலச் சன்னி
- பித்தச் சன்னி
- முர்த்துச் சன்னி
- செவிட்டுச்சன்னி
- கபாலச் சன்னி
- குல்ம சன்னி
- தேவ சன்னி
- ஜல சன்னி
- மகாகோல சன்னி


கொர சன்னி முகம்


செவிட்டுச்சன்னி முகம்


ஜலசன்னி முகம்


வாதசன்னி முகம்


அமுக்குச் சன்னி முகம்


கபால சன்னி முகம்


தீச்சுவாலைச் சன்னி முகம்

இவற்றைத்தவிர "பன்னிரு தோஷம்" எனப்படும் சாந்திக்கிரியைகளுக்காகவும் முகமூடிகளைப் பயன்படுத்துகின்றனர். இப்பன்னிரு தோஷங்களும் ஆடப்படுவது, நோய்வாய்ப்பட்டவரை நிலத்தில் அமரவைத்து வெண்நிறமான துணியினால் போர்த்தியபின், முகமூடியணிந்த பேயோட்டியினால் அவர் முன்வைத்து ஆடுவதாலாகும்.

- பந்தம் பாலி (தோஷம்)
- முகுரு பாலிய
- அங்குரு தும்மல பாலிய
- வளஸ் பாலிய
- சலு பாலிய
- களஸ் பாலிய
- கக்குல் பாலிய
- கெண்டி பாலிய
- கடு பாலிய
- தலுமுற பாலிய
- தெம்பிலி பாலிய

பந்தம் பாலிய ஆடும்போது அணியப்படும் முகமூடிக்கு கீழத்தாடை இல்லை. இருபக்கமும் பற்கள் புடைத்துப்போன பேய் உருவமாகும். சணல் நாரினால் அமைந்த தலைப்பாகை அணிவதுடன் கறுப்பு நிற துணியே அணியப்படும். இருகைகளாலும் ஏந்திவரும் தீப்பந்தத்தை சுழற்றிய வண்ணம் குங்கிலியத்தை எறிந்து தீப்பிழம்புகளை பரப்பி நோய்வாய்ப்பட்டவரை வாழ்த்திப் படையல்கள் தந்து அகன்று செல்வார்.


கடு பாலியவின்போது பேய் முகமூடியொன்று அணியப்படுவதுடன் கையிலே வாளொன்றை ஏந்திவந்து அணிநடை செய்து நோய்வாய்ப்பட்டவருக்கு வாழ்த்திப் படையல் செய்து அகன்று செல்வார். களஸ்பாலியவின் போது பூமித்தாயை அடையாளம் காட்டியவாறு குடமொன்றை தலையில் தாங்கி வாழ்த்திச் செல்வார். சலு பாலியவிற்காக அணியப்படும் முகமூடி மஞ்சள் நிறமானது. பாதிக்குத் திறந்திருக்கும். இரு கண்களுடன் சிரித்தவாறு பற்களைக்காட்டும் திறந்த வாயாகும். வயிற்றில் தலையணையை வைத்துக்கட்டி, பெரிதாகக் காட்டியிருப்பதுடன் துணியினால் தோள் மூடப்பட்டுள்ளது. பெண்ணழகை வெளிப்படுத்தி நடித்துக்காட்டுவதுடன் துணியை அசைத்து நோயுற்றவரை வாழ்த்துவார். இவ்வாறே எல்லா பாலியவுக்களுக்கும் உரித்தான முகமூடிகளைப் போலவே ஆடையணிகளும் உள்ளன.

இந்த பேய்முகங்களுள் இரத்தக் காட்டேறி, இடையன் பேய், கரும்பேய், சூனியப்பேய், சூனியக்காரப் பெண் பேய், கறாப்பேய், மோகினிப் பிசாசு என்பவைகளும் உள்ளன. பேய் முகங்களுள், மகாகோல சன்னியவுக்காக அணியப்படும் முகமூடி விசேடமானது. இதில் பதினெண் சன்னிகளையும் வெளிப்படுத்திக்காட்டும் விதமாக இருக்கும். ஆட்டக்காரரின் உண்மையான முகம் மறைக்கப்படும் விதமாக கறாப்பேயின் முகத்தைப் போன்ற சிறிய முகமூடிகள் பன்னிரண்டு உள்ளன. அதன் மீதிருக்கும் பேயுருவில் படமெடுத்த பாம்பின் முகத்துடன் காணப்படும். இரு பக்கமும் அவ்வாறான உருவங்கள் இரண்டாகும். எல்லா இடங்களிலும் போல முகங்கள் உண்டு. இங்கு இருபது முகங்கள் உள்ளன. இப்பேய் மயானங்களில் பிணங்களைத் தின்றவாறு அலைந்து திரிகின்ற காட்டுப் பூண்டுகளைப் பிழிந்து பதினெட்டு குளிசைகளைச் செய்து பதினெண் பேய்களை உருவாக்கியிருக்கும். வாயினுள் கூரான பல்வரிசையில் கடித்துக் கொள்ளும் இரு பிணங்களும், இரு கைகளிலும் இரு பிணங்களும் மார்பில் இன்னொரு பிணமும் கால்களால் மிதியுண்ட இரு பிணங்களும் தலையின் பின்புறமாக இன்னும் பிணங்கள் இரண்டுமாகச் செதுக்கப்பட்டுள்ளன. தலையில் படம் எடுக்கும் நிலையில் ஐந்து பாம்பு உருவங்கள் காணப்படும். காதுச்சோனைகளில் பூக்கள் செதுக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டுள்ளன. மகாகோல முகம் பின்வருமாறு காட்டப்படுகின்றது.



மகாகோல சன்னிய

பேய் முகங்கள் சிலவற்றின் முகமூடிகள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.



சூனியப்பேய்



கறாப்பேய்

பேய்களின் முகங்களுக்கு மேலதிகமாக அரக்கர்களின் முகங்களும் உள்ளன.


நாக அரக்கன்


கட அரக்கன்


மருஅரக்கன்


குருலு அரக்கன்

இவற்றுக்கு மேலதிகமாக மேலும் சில முகமூடிகளும் உள்ளன. அவற்றுள் மிக அழகிய பெண்ணான கிரிதேவியின் முகம், விஷ்ணு அவதாரம், நாகக்கன்னி, நாக ராசன், நாக குருளு போன்றன சிலவாகும். அவ்வாறே மனமே இராணியின் முகமூடி, இராணியினதும் அரசனதும் முகங்களும் மிக அழகாகச் செதுக்கப்பட்டு உள்ளன. பின்வரும் முகமூடிகளைப் பார்ப்போம்.



இராணி


அரசனின் முகமூடி


மனமே இராணி


கிரிதேவி


நாக அரசன்


நாக குமாரன்

## முகமூடி அமைத்தல்

முகமூடிகள் அமைப்பதற்காகத் தெரிவுசெய்யப்படும் பலகை வகைகள் பாரமற்றவைகளாக இருத்தல் வேண்டும். அவ்வாறான முகமூடிகளை அணிந்துகொண்டு ஆடுதல் மிகவும் இலகுவாகும். அவ்வாறே இப்பலகை வகைகளை வெட்டும்போதும், இணைக்கும்போதும், வரியிடும் போதும், துளையிடும் போதும் பிளவுகள், வெடிப்புக்கள், கோணல் இல்லாதவாறு இருத்தல் வேண்டும். இலேசான பாரங்குறைந்த பலகை செதுக்கல் வேலைக்கு இலகுவானது. இதற்கெனப் பெரும்பாலும் கடல் மாங்காய் மரம் பயன்படுத்தப்படும். ஏழிலைப்பாலை, முள்முருக்கை மரப்பலகைகளும் முகமூடிகள் செதுக்கப் பயன்படுத்தப்படுகின்றன. கர்ண பரம்பரைக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மகாசம்மத்த அரசியின் முன், சந்தன மரத்தினால் செதுக்கப்பட்ட முகமூடி அணிந்து கோலம் நடனம் ஆடப்பட்டதாகக் கூறப்படுகிறது. அவ்வாறாக பாரத்தால் கூடிய, விலையும் அதிகமான, வடிவமைக்கக் கடினமான சந்தன மரப்பலகைகளால் இன்று முகமூடிகள் செதுக்கப்படுவதில்லை.

பாரம்பரிய முகமூடிகள், வார்க்கப்படும்போது பாடப்படும் கவிதைகளில் உள்ளவாறு அமைக்கப் படுகின்றன. அங்கலட்சணம், செதுக்கற்பண்புகள் என்பன தொடர்பாக அப்பாடல்களில் விபரிக்கப்படுகின்றன. உதாரணமாக பின்வரும் கவிதையைப் பார்ப்போம்.



நீளத்தால் மூன்று முழம்
ஒரு முழமோ பெண் வர்ணம்
ஐந்து விரலும் கரடி முகமும்
கைகளிரண்டில் மகரங்கள் இரண்டும்

இவ்வாறாக முகமூடியின் தன்மை விளக்கப்படுகிறது. இதற்கமைய செதுக்குவோர் முகமூடியின் செதுக்கலை மேற்கொள்வர்.

முகமூடியைச் செதுக்கும்போது மரத்தின் வெளிப்பட்டையை அகற்றி, முண்டத்தை தேவையானவாறு குற்றிகளாக வெட்டிக்கொள்வர். பின்னர் நகவுளி, செதுக்கல் உளி போன்ற உளிகள் அடங்கிய கருவித்தொகுதியின் துணையுடன் இச்செதுக்கல் வேலை செய்யப்படும். ஓரளவுக்கு வடிவமைக்கப்படும் முகமூடிக்கு புகை மூட்டப்பட்டு புகையேற்றப்படும். இதனால் பாரங்குறைவதுடன் வெந்நிறமான பலகை பொன்னிறமாக மாறும். அவ்வாறே நீண்டகாலம் வைத்துக்கொள்ளவும் இயலும். (மூன்று மாதங்களுக்கு புகை மூட்டப்பட்டு அமைக்கப்பட்டு முகமூடியை 75 ஆண்டுகளுக்கு வைத்துக்கொள்ளவும் இயலும் என்று கூறப்படுகிறது.)

இதன்பின், செதுக்கற் கலைஞர்கள், முன்னால் புடைக்கும் விதமான கண்கள், வெளியில் தொங்கும் நாக்கு, நெற்றியில் சுருக்கம், முன்னே தள்ளியுள்ள பற்கள், கூரான தந்தம், கோரைப்பல், பாம்புப் படம் போன்ற வடிவங்களை மிகவும் கவனமாகச் செதுக்குவர். சில முகமூடிகளின் பாகங்களை வெவ்வேறாக அமைத்து பின் ஒன்றாக இணைப்பதனால் முழு வடிவத்தையும் பெறுவர். அரச முகம், அரக்கர் முகம் போன்றவற்றில் உள்ள கிரீடம், காதுத்தோடுகள், தலையணிகள், கோரைப்பற்கள் என்பன அவ்வாறாகப் பின்னர் இணைக்கப்படும் பாகங்களாகும்.

நன்கு தேய்ந்து செப்பமாக்கிய முகமூடிகளுக்கு வர்ணந்தீட்டுவதும், புனையும் பாடல்களுக்கு அமைய இடம் பெறும். அரசர்கள், மேன்மக்களைச் சித்தரிக்கும் போது பயன்படுத்தும் நிறங்களை, சாதாரண பொது மக்களைக் குறிப்பதற்காகப் பயன்படுத்துவதில்லை. சாந்தமான முகங்களைக் காட்டும்போது மஞ்சள், இளஞ்சிவப்பு நிறங்களும், மரு அரக்கன், கவ அரக்கன் போன்ற பேய் வகைகளின் முகங்களுக்காகக் கறுப்பு, சிவப்பு போன்ற இருள் வர்ணங்களும் பயன்படுத்துவர். முதலில் 'அல்லியாது செய்தல்' என்று அவர்கள் அழைக்கும் முகமூடியை வெண்நிறமாக அமைக்கும் பூச்சை முகமூடிக்குப் பூசுவர். வெண்களி அல்லது வெள்ளைக்களி மண்ணால் இப்பூச்சு செய்யப்படும். முதலில் வெண்நிறமாக்கப்படும் முகத்தில் வேறு நிறங்களைப் பூசுவது இலகு என்பதால் இவ்வாறு செய்யப்படுகிறது. அவர்கள் நிறங்களைப் பெறுவதற்காகத் தாவரங்களையும் கனியங்களையும் பயன்படுத்தியுள்ளனர். அவற்றுள் சில பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| சாதிலிங்கப்பூ | - சிவப்பு நிறம் | அவிரிய இலை | - நீல நிறம் |
| செம்பூரான்கல் | - சிவப்பு கலந்த பழுப்பு நிறம் | கீகிரிந்திய இலை | - பச்சை நிறம் |
| சுண்ணக்கல் | - மஞ்சள் நிறம் | வெண்களி | - வெள்ளை நிறம் |
| போவிற்றியா தாவரம் | - ஊதா நிறம் | | |

தற்போது சாந்திக் கிரியைகளைப் போலவே, கண்காட்சிப் பொருளாகவும் முகமூடிகள் உருவாக்கப்படுகின்றன. ஆக்கபூர்வமான செதுக்கல் கலைஞர்களால் உருவாக்கப்படும் அலங்காரமான முகமூடிகள் சுற்றுலாப் பயணிகளால், தம் ஞாபகார்த்தமாக அதிக விலைகொடுத்து கொள்வனவு செய்யப்படுகின்றன. சம்பிரதாயபூர்வமான முகமூடியின் பெறுமதி இவற்றில் இல்லாதபோதும் இலங்கை மக்கள் ஒரு பிரிவினரின் சீவனோபாயத் தொழிலாகவும் இக்கைத்தொழில் இன்று மாறியுள்ளது.

ஆயினும் இலங்கையரின் தனித்தன்மையை வெளிக்காட்டும் சம்பிரதாயபூர்வமான முகமூடிக்கலையானது எம்மிடமுள்ள விலைமதிக்க முடியாத அருஞ்செல்வமாகும். இக்கைத்தொழிலைக் காப்பது எமது தேசிய பொறுப்பாகும்.


இலவசமாக விநியோகிப்பதற்காக

# 1.5 பித்தளைக் கைத்தொழில்

பண்டைக் காலத்து இலங்கை நாட்டில் இருந்த உலோகக் கைத்தொழில்களுள் பித்தளைக் கைத்தொழிலையும் காணக்கூடியதாக உள்ளது. கண்டியுகம் ஆரம்பிக்கும் போது, கைத்தொழிலை அடிப்படையாகக் கொண்டு மக்கட் சமூகத்தில் குல அமைப்பு உருவாகியிருந்தது. பித்தளைக் கைத்தொழிலில் ஈடுபட்ட கலைஞர்கள் உலோகக்காரர் என்று அழைக்கப்பட்டனர். பித்தளைக் கைத்தொழில் அதிவேகமாக விருத்தி அடைந்த கண்டியுகத்திலே விளக்குகள், வெற்றிலைச் செப்பு, செம்பு, பூத்தட்டு முதலிய வீட்டுப்பண்டங்களைப் போலவே பிணைச்சல்கள், தாழ்ப்பாள் போன்ற கட்டிடப்பொருட்களும் பித்தளையினால் செய்யப்படுகின்றன.

## பித்தளையின் இயல்புகள்

- செம்பும் நாகமும் 2:1 என்ற விகிதத்தில் கலந்து பித்தளை செய்யப்படுகின்றது. இந்த உலோகம் பிரகாசமிக்க கடும் மஞ்சள் நிறத்தைக் கொண்டது.
- இதன் உற்பத்தி, தகடு, கம்பி, கோல்கள், தண்டு என்றவாறாக சந்தையில் உள்ளது.
- வார்ப்பதற்கு மிகவும் ஏற்ற உலோகமாகும்.
- அராவுதல், கடைச்சல், வெட்டுதல், தறைதல், காய்ச்சியிணைத்தல் போன்றவற்றை இலகுவாகச் செய்யலாம்.
- இந்த உலோகத்தினால் வடிவமைக்கவும், மிகக்கடினமான காய்ச்சி யிணைத்தல் செய்யவும் சற்றுக் கடினமானது.



இந்த சிறப்பான பண்புகளின் காரணமாகவும், மனதைக் கவரும் நிறத்தினாலும், பிரகாசத்தினாலும் தற்காலத்தில் பல்வகையான பண்டங்கள் செய்வதற்காகவும் அலங்காரமான வீட்டுப்பொருட்களுக்காகவும் பெருமளவில் பயன்படுகின்றது. பித்தளைப் பாண்டங்களுக்காக சந்தையில் கூடிய கோரிக்கைகளும் விலையும் உள்ளது. தாழ்ப்பாள், பிணைச்சல் போன்ற கட்டிடப் பொருட்களுக்காவும் நல்ல கோரிக்கை உள்ளது.

மெல்லியதும், தூரத்துக்குப் பரவக் கூடியதுமான காதுக்கு இனிமையான ஓசையின் காரணமாக கோயில் மணிகளைச் செய்வதற்காகவும் பித்தளையைப் பயன்படுத்துகின்றனர்.

பித்தளையில் வேலையைச் செய்யமுன் உலோகத்தை மெதுமைப்படுத்தல் அல்லது அதன் உயிர்ப்புத் தன்மையைக் குறைத்தல் வேண்டும். இதற்காக ஓரளவுக்கு சூடேற்றி பச்சைத் தண்ணீரில் அமிழ்த்துவதால் அதன் உயிர்ப்புத் தன்மை குறையும். அதன் கூர்மைத்தன்மையைக் குறைத்தல் எனவும் இது அழைக்கப்படும்.

பித்தளையை வெட்டுவதற்காகப் பயன்படும் வாளின் அலகில் ஓரங்குலத்தில் 22 பற்களேனும் இருத்தல் பொருத்தமானது. பித்தளையைக் காய்ச்சியிணைக்கும் போது, காய்ச்சியிணைக்கபட்ட இடத்தைச் சுத்தஞ் செய்வதற்கேற்ற பாயவகையாக ஐதான நாகக்குளோறைற்றுக் கரைசலைப் பயன்படுத்தலாம்.

## பித்தளைத் தகடுகளை வடிவமைத்தல்

அலங்காரப் பொருட்களை அமைக்கும் போது உள்வளைவு செய்தல், வடிவமைத்தல் போன்ற வேலைகளைச் செய்ய வேண்டியிருக்கும். தோலினால் செய்யப்பட்ட சதுரமான அல்லது வட்டமான மணலால் அடைத்த தலையணையை இதற்குத் துணையாக வைத்துக் கொள்ளலாம். தலையணை கிழியாதவாறு வேலை செய்யும் போது கவனமாக இருத்தல் வேண்டும்.

மரத்துண்டில் குழியொன்றைச் செய்து கொள்வதன் மூலம் உள்வளைவு வேலை, வடிவமைத்தல் போன்ற பட்டறை வேலைகளைச் செய்யலாம்.

## பித்தளைப் பாண்டங்களை கழுவுதல்

உயிர்ப்புத்தன்மையைக் குறைக்கும் போது பித்தளையின் மேற்பரப்பில் புடைத்துவரும் ஒக்சைற்றுப் படலத்தைக் கழுவி விடுவதற்காக காரப்பொருள் கொண்ட பாத்திரத்தில் அமிழ்த்தலாம். அவ்வாறில்லாவிடின் வளையிடுதல், நிறமிடுதல் என்பன போன்ற அலங்கார வேலைகள் கடினமாகும்.

ஒரு கலன் நீரில் சந்தையில் கிடைக்கக்கூடியதாக உள்ள சல்பூரிக்கமிலம் 6 அவுன்சாவது ஊற்றி, மரத்துண்டினால் நன்கு கலவை செய்தபின் இக்கரைசல் செய்துகொள்ளப்படும். சல்பூரிக்கமிலத்துள் நீரை ஊற்றுதல் அல்லது கொதிக்கும் நீரில் சல்பூரிக்கமிலம் ஊற்றுதல் என்பன ஒரு போதும் செய்யலாகாது. இதனால் ஆபத்து விளையலாம்.

**பித்தளைப் பாண்டங்களை,**

01. உயிர்ப்பைக் குறைப்பதற்காக இடுக்கியினால் பிடித்துச் சூடாக்கவும்.
02. சூடேற்றிய பித்தளைப் பாண்டத்தை கைத்தூரத்தில் வைத்துக் கொண்டு அமிலக் கரைசலில் அமிழ்த்தவும். இங்கு ஆபத்து ஏற்படக்கூடுமாதலால் பாடசாலையில் இதனைச் செய்யும் போது பித்தளையை ஆறவிட்டு அமிலக் கரைசலில் அமிழ்த்தவும்.
03. 02 நிமிடங்களுக்குக் கரைசலில் அமிழ்த்திய பின் உலர்ந்த குச்சியொன்றினால் பித்தளைப் பாத்திரத்தை வெளியில் எடுக்கவும்.
04. சலவைத்தூள் அல்லது மெல்லிய மணலையிட்டுத் தேய்க்கவும்.
05. ஓடும் நீரில் கழுவிவிடவும்.
06. சுத்தமான துணியொன்றினால் நன்கு தேய்த்து உலர்த்தவும். மணற்தூளின் இடையே வைத்தும் உலர வைக்கலாம்.

சூடேற்றப்பட்ட பித்தளையை, அமிலக்கரைசலில் இடுவதன் மூலம் ஒக்சைற்று மிகவும் எளிதாக அகலும்.

## பித்தளையை மினுக்குதலும் நிறந்தீட்டலும்

உற்பத்தியின் போது ஏற்படுகின்ற கீறல்கள், சேதங்கள், கோணல், கோளாறுகள் என்பனவற்றை அழித்துவிட, எமரித்தாள் அல்லது 'பம்ஸ்' கல்லினால் அல்லது 'பம்ஸ்' தூளினால் தேய்க்கவும்.

மினுக்கும் பொறியினாலும் இதனை இலகுவாக மினுக்கிக்கொள்ள இயலும். மினுக்கிய பின், தேன் மெழுகைப் பூசி 15 நிமிடங்களுக்கு ஊறவைத்து மினுக்கம் ஏற்படும் வரை சுத்தமான துணியினால் தேய்க்கவும். மெழுகு அல்லது அரக்குப் பூசுவதனால் மினுக்கத்தை நீண்ட காலம் நிலைத்திருக்கச் செய்யலாம்.

தேன்மெழுகைச் சூடாக்கித் திரவமாக்கிய பின், டேர்பன்டைனைச் சேர்த்து குச்சியினால் கலக்கியபின், சுத்தமான துணிப்பந்தைக் கொண்டு பாண்டத்தின் மேற்பரப்பில் மெல்லியதாக பூசிக் கொள்ளவேண்டும்.

# 1.6 'பீரலு' இரேந்தைக் கைத்தொழில்

இலங்கையின் தனித்தன்மையுடன் கூடிய உள்நாட்டுக் கைத்தொழில்கள் பல எம்மத்தியில் இருப்பினும் 'பீரலு' இரேந்தைக் கைத்தொழில் எமக்கு ஒல்லாந்தரிடமிருந்தே கிடைக்கப்பெற்றுள்ளது. ஒல்லாந்தர் எம் நாட்டுக்கு வருகை தர முன்னிருந்தே எம் நாட்டில் இரேந்தைக் கைத்தொழில் இருந்தமைக்கான சான்றுகள் உள்ளன. ஆயினும் அது 'பீரலு' இரேந்தையாகவன்றி கை இரேந்தை வகையாகும். அது அரச குடும்பத்தினரின் ஆடைகளை அலங்கரிப்பதற்காக ஊசியைக் கொண்டு கையினால் நூற்கப்பட்ட இரேந்தை வகையாகும்.

இந்நாட்டுக்கு வருகை தந்த ஒல்லாந்தரில் பெரும்பான்மையானோர் இலங்கையின் தென் பகுதிக் கரையோரங்களில் வாழ்ந்துள்ளனர். ஒல்லாந்தப் பெண்மணிகளிடமிருந்து அண்மையில் வாழ்ந்த சிங்களப் பெண்மணிகள் 'பீரலு' இரேந்தைக் கலையைக் கற்றுள்ளனர்.



'பீரலு' இரேந்தையை நூற்பதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம் 'பீரலு' தலையணை என்றழைக்கப்படும். மரத்தினால் வேயப்பட்ட 'பீரலு' குற்றிகள் இரண்டினால் தொடக்கப்படும் சங்கிலியுடனான பீரலுவை மீண்டும் மீண்டும் ஒன்று சேர்த்து 'பீரலு' இருநூறிலிருந்து முன்னூறு வரை ஒன்று சேர்த்தவாறு மிகவும் அலங்காரமான வலையமைப்பு நூற்கப்படும். சலக்கை, மல்லிகை, தவளை, அரளுக்காய் என்றவாறான உள்நாட்டுப் பெயர்களைக் கொண்ட 'பீரலு' இரேந்தை வகைகள் தென்பகுதி மகளிரினால் பின்னப்படுகின்றது.

'பீரலு' தலையணையில் குண்டூசியை இறுக்கி வைத்துக் கொள்ளும் விதத்தில் வெட்டு ஒன்றையிட்டு இந்த 'பீரலு' செய்யப் பட்டுள்ளது. அங்கும் இங்கும் அனுப்பியவாறு இரேந்தையை நூற்கும்போது 'பீரலு' களில் சுற்றப்பட்டுள்ள நூல் தளர்ந்துவரும் வகையில் 'பீரலு' அமைக்கப்பட்டுள்ளது.

அக்காலத்தில் தென்பகுதிப் பெண்மணிகள் 'பீரலு' இரேந்தை வைத்துத் தைத்த கை நீளமான சட்டையும் சால்வையைக் கொண்டு இரு தோள்களை மூடியவாறே தமது பயணங்களை மேற்கொண்டனர். பின்னர் காலத்தின் தேவைக்கமைவாக ஆடைகளுக்கு மேலதிகமாக வாயில், யன்னல் துணி, நாற்காலி உறை, முக்காலி உறை போன்றவையும் சீலைக்கரை, குஷன் உறை, கைப்பை, கட்டில் மேலுறை, திரைச்சீலை, மேசைக்கான மேலுறை என்பவைகளுக்காகவும் துணியுடன் கலந்து செய்த 'பீரலு' இரேந்தை உருவாகியது. தற்காலத்தில் 'பீரலு' இரேந்தை கைத்தொழிலாகி வெளிநாட்டுச் செலாவணி யைச் சம்பாதிக்கும் வாணிபப் பொருளாக மாற்றம் பெற்றுள்ளது. வெளிநாட்டவரிலிருந்து நாம் பெற்ற அருமையான சீதனமாக 'பீரலு' இரேந்தைத் தொழிலை நாம் மதிக்கலாம்.

**பயிற்சி :**

01. "இலங்கையின் தற்போதைய பொருளாதார, சமூக பிரச்சினைகள் ஏராளமானவற்றுக்கான முக்கிய காரணமாக அமைவது, எமது மூதாதையர் எமக்கு அளித்துச் சென்றுள்ள கலைநுட்பங்கள் அருகிப் போவதற்கு இடமளித்ததனாலாகும்".

| அருகிப்போய்க் கொண்டிருக்கும் கலை நுட்பங்கள் | செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் | அக்கலைநுட்ப விருத்திக்கு நீங்கள் கூறும் யோசனைகள் |
|---|---|---|
| | | |

02. உங்கள் பகுதி கலைநுட்பங்கள் பற்றி வகுப்பு நண்பர்கள் சிலருடன் கற்கையொன்று மேற்கொண்டு நாளிதழுக்கான சிறப்புக்கட்டுரை ஒன்றுக்கான அறிக்கை தயாரிக்கவும்.

03. கலைநுட்பங்கள் தொடர்பான வகுப்பு மட்டத்திலான மாதிரிக் கண்காட்சியொன்றை நடாத்தவும்.

04. தவணை இறுதியில் / ஆண்டு இறுதிக் கலைநிகழ்ச்சிக்காக உங்களால் ஆக்கப்பட்ட முகமூடியொன்றை அணிந்து ஆக்கபூர்வமான கோலம் நடனமொன்றை முன்வைக்கவும்.